# நமது தேசத்துக்காக விழித்திருந்து ஜெபி

(எசேக்கியேல் 22:1-31@ 33:1-7)

எசேக்கியேல் 22ஆம் அதிகாரம் கி.மு 593ஆம் ஆண்டு முதல் 571ஆம் ஆண்டுகளுக்கிடையில் என்ன நடந்தது என்பதை நமக்கு விவரித்துக் கூறுகிறது. தேவன் அந்த நகரத்தை குறித்து கூறும்போது அது நரகலான விக்கிரக ஆராதனையினாலும், இரத்தம் சிந்துதலினாலும் தன்னை தீட்டுபடுத்தியது(22:2-4) என எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாக வெளிப்படுத்துகிறார்.

தேவனுடைய நகரத்தாராகிய ஜனங்கள் எங்ஙனம் இப்படி மாறமுடியும்? தேவனுடைய வார்த்தையை இதன் தலைவர்கள் கேளாமலும் அவருக்கு பயப்படாமலும், அதன்படி நடவாமலும் இருந்ததே இதற்குக் காரணம்.இஸ்ரவேலின் அதிபதிகள் தங்கள் தலைமைத்துவத்துக்குரிய நல்லொழுக்கங்கள் (22:6), குடும்ப நீதி நெறிகள் (22:7,10-11), வழிபாட்டு முறைகள் (22:8-9),முறையான பாலுறவுகள்(22:9-11), சமூக நீதி (22:7,9,12) வணிக நெறிமுறைகள்(22:12) ஆகியவைகளில் வழிதவறிநடந்தார்கள்.

எருசலேம் நகரமானது தண்டிக்கப்பட்டாலும் அதற்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டாலும் அது மீட்கப்பட முடியாத நிலையில் காணப்பட்டது. அது தேவ கோபத்தினால் உருக்கப்படக்கூடிய நிலையில் காணப்பட்டது. ஆனாலும் அது உருகி அழிவதற்கு முன்னால், தேவன் அதற்கு இன்னொரு வாய்ப்பு கொடுக்கத் தயாராக இருந்தார். தேவன் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனை தேடினார், ஒருவரும் இல்லை(22:30).இந்நிலையில்,எசேக்கியேல் தனது எல்லா சாத்தியமான வழிகளையும் பிரயோகித்து தேவ ஜனங்கள் தங்கள் தேவனிடமாக திரும்பச் செய்யும் வண்ணம் அவனை தேவன் அனுப்புகிறார். ஆயினும் இஸ்ரவேல் வீட்டார் அவனுக்கு செவிகொடுக்க மனதில்லாதிருந்தார்கள்(3:7,33:30)

ஏசேக்கியேல் 22ம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது ஒரு நகரம் பாதிக்கப்படுவதற்கும் அல்லது அழிவதற்கும் அதின் காவலாளியானவனே முக்கிய பங்கு வகிக்கிறான்/வகிக்கிறாள். காவலாளியானவன் நகரத்தின் மதில்கள் மேலும் அல்லது திறப்பிலும், இராமுழுவதும் விழித்து காவல்காக்கிறவனாய் இருக்க வேண்டும் (ஏசாயா 21:11-12,62:6). அவன் எச்சரிக்கையாயிருந்து ஜனங்களை நகரத்திற்கு விரோதமாய் வருகிற ஆபத்துக்கும் அல்லது யுத்தத்திற்கும் எச்சரிக்கிறவனாயும் இருக்க வேண்டும்(எசேக்கியேல் 33:1-7). அவன் கர்த்தரை நோக்கிக் கொண்டு தன் இரட்சிப்பின் தேவனுக்கு காத்திருக்கிறவனாகவும் காணப்பட வேண்டும்(மீகா 7:7)

நம்முடைய தேசமும் நகரமும் ஏசேக்கியேலின் நாட்களில் காணப்பட்ட மோசமான எருசலேமைப் போல இல்லை. ஆனாலும் நம் கண்கள் காண்கிற விதமாகவும் காதுகள் கேட்கிற விதமாகவும் நம்முடைய தேசத்திலும் நகரங்களிலும் சமாதானமானது கொடிகட்டிப் பறக்கவில்லை. இப்படி அநீதியான காரியங்கள் நிகழ்கின்ற வேளையில் நாம் நம்முடைய தலைகளை குலுக்கிக்கொள்வதும், அவைகளைக் குறித்து கருத்து, குறை கூறுவதுமாய் இருக்கிறோம். சில நேரங்களில் இடம் பெயர்ந்து செல்லவும்

செய்கிறோம். நாம் எந்த தேசத்திலே அல்லது நகரத்திலே வாழ்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. நாம் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து நாம் இருக்கின்ற இடத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இப்படியிருக்க, மலேசிய தேசத்தில் பிறந்தவர்களாகிய நாம் விழித்திருந்து தேசத்திற்காக ஜெபிக்க கற்றுக்கொள்ள ஆரம்பிக்க வேண்டும். இதற்கு நாம் ஆயத்தமா?

''விழித்திருந்து தேசத்துக்காக ஜெபி'' என்கிற இவ்வூழியத்தில் நாம் எவ்வாறு பங்குபெறலாம்?

- இடைவிடாது நாம் தேவனை நோக்கி ஜெபித்தால் தேவன் நாம் விழித்திருக்கத்தக்கதாக நம் கண்களை திறப்பார்: தனி நபராக, குடும்பமாக, சபையாக, நகரம்/தேசமாக எவ்விதத்திலாவது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறியிருக்கிறோமா? (சங்கீதம் 119:126) [விழித்திருப்பது என்பது ஒரு காவலாளனிடம் காணப்பட வேண்டிய அல்லது அவன் வளர்த்துக்கொள்ளவேண்டிய ஒரு முக்கிய குணாதிசயமாக காணப்படுகிறது.] விழித்துக் கொண்ட பின்பு நாம் திறப்பிலே நின்று நம்முடைய அக்கிரமங்களினின்று மனந்திரும்பி, நம்முடைய குடும்பம், சபை, நகரம்/தேசம் யாவும் தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பவும் ஜெபிக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். தேவன் நம்மையும் நமது குடும்பம் நமது சபை மற்றும் நமது நகரம்/தேசத்தை மன்னிக்கவும், அவர் நம்மை வழிநடத்தவும் ஆசீர்வதிக்கவும் அவருடைய பாதத்திலே மன்றாடி நிற்போமாக.

- நம் தலைகளை தாழ்த்தி அவர் பாதத்தில் காத்திருந்து அவருடைய சத்தத்திற்கு செவி கொடுப்போமாக. நாம் அதிகமாக காத்திருக்க காத்திருக்க தேவ சித்தத்தை மிகவும் தெளிவாக கேட்கவும் பார்க்கவும் முடியும். நாம், நமது சகநண்பர்கள், ஆன்மீக மூப்பர்கள், ஆன்மீக நண்பர்கள் அளிக்கும் ஆலோசனைகளை நாம் தெளிவான மற்றும் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

- நாம் கர்த்தரின் பாதத்தில் விழித்து அமர்ந்திருந்து அவர் அளிக்கும் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வோமாக. (சங்கீதம் 130:5-6). ஏனெனில் வேத வசனமும் நமக்கு இவ்விதமாகத் தான் கூறுகிறது ''கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா'' (சங்கீதம் 127)

- நாம் பேசவேண்டிய காரியங்களை தாழ்மையுடனும் உறுதியாகவும் சரியான நேரத்திலும் பேச தேவன் நமக்கு போதிய ஞானம், தைரியம் மற்றும் துணிவையும் அருள வேண்டி நிற்போமாக.

- தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்த எல்லா காரியங்களுக்காகவும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய உக்கிராணக்காரர்களாய் இருக்கிறோம். ஆமென்.

# மலேசியாவின் சமாதானத்திற்காக ஜெபியுங்கள்

## ஜெப குறிப்பு 1

மலேசியா தீவிரவாதி எதிர்ப்பு பிரிவு ஜனவரி 31, 2015ம் ஆண்டு ஐசிஸ் தலைவனை கோலாலம்பூரில் பிடித்தனர். ஏறக்குறைய 59 மலேசியர்கள் அதிகாரபூர்வமாக ஐசிஸ்சில் சேர்ந்துள்ளனர்.
[Ref:http://www.themalaysianinsider.com/malaysia/article/anti-terror-unit-nabs-isis-leader-in-kuala-lumpur,
http://www.themalaysianinsider.com/malaysia/article/sex-money-power-lure-would-be-jihadists-to-isis-say-cops]

கிறிஸ்தவர்கள் மற்றும் திருச்சபைகள் ஊக்கமாக தேவனுடைய அன்பை சமுதாயத்தில் பகிர்ந்துக் கொள்ள வாருங்கள் நாம் ஜெபிப்போம். மலேசியர்கள் நோக்கத்துடன் வாழவும், வன்முறைக்கும் அழிவு பணிக்கும் தங்களை ஈடுபடுத்தி கொள்ளாதபடிக்கு, தேவனையும் அவரின் அன்பையும் அறிந்துக்கொள்ள ஜெபிப்போம்.

## ஜெப குறிப்பு 2

தீவிரவாதத்தை எதிர்க்கும் சட்டம் ஒன்று நாடளுமன்றத்தில் மார்ச் 2015ல் பேசப்படும் அதில் தடைச் செய்யும் உட்புற சட்டம், அவசர சட்டம் மற்றும் குற்றத்தைத் தடுக்கும் சட்டம் கொணடு வர பேசப்படும்.

நம்முடைய தலைவர்கள் இந்த சட்டத்தின் கீழ் நல்ல தீர்வுகளை எடுப்பதற்கு தேவனின் ஞானத்தையும், வழி நடததுதலையும் சார்ந்திருக்க, தேவனுக்கு பயப்படும் பயத்தில் சேவை செய்ய, அரசியலின் காரணத்தால் ஊக்கப்படாமல் மக்களின் நலனையும், பாதுகாப்பையும் எண்ணத்தில் வைக்க ஜெபிப்போம்.

## ஜெப குறிப்பு 3

நாம் தொடந்து படிக்கிறோம், தேசம் சவாலான பொருளாதார நிலமையை எதிர்நோக்கும் போது, இன அழுத்தம், அரசியல் சண்டை, ஆபத்தான நிலை, கட்சிகள் மத்தியிலும், கட்சிக்குள்ளும் கட்சி பிளவுகள், வெளிப்படையான விவாதங்கள், சண்டைகள்.

அரசியாளர்கள் தங்களின் தன்னல நோக்கித்திலிருந்தும், உயர்வுக்காக பதவிக்காக வல்லமை போராட்டத்திலிருந்திலும் சண்டையிலிருந்தும் வெளியாகி பொருளாதார சூழ்நிலையை நல்ல நிலமைக்குக் கொண்டு வருவதில் நோக்கமாக இருக்க வாருங்கள் நாம் ஜெபிப்போம்.

## ஜெப குறிப்பு 4

திருச்சபை உலகத்திற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருக்க அழைக்கப்பட்டது. நாம் அந்த பிரதான அழைப்பில் வாழுவோமாக.

கிறிஸ்தவர்கள் கர்த்தர் அவருடைய திருச்சபையிலிருக்கும் கோபங்கள், மன்னிக்கும் மனப்பான்மை இயலாமைகள், கசப்புக்கள், ஒற்றுமையின்மையை சந்திக்கவும் சுத்திக்கரிக்கவும் இடங்கொடுக்க வாருங்கள் நாம் ஜெபிப்போம். அவரின் வழியில் முரண்பாடுகளை சரிசெய்ய ஜெபிப்போம். தன்னல நோக்கமும் தொகுப்பும், போட்டி, பொறாமை, தவறான குற்றச் சாட்டு, உயர்வுக்காக பதவிக்காக வல்லமை போரட்டங்களும் சண்டைகளும், அவரின் திருச்சபையிலிருந்து பிடுங்கப்பட ஜெபிப்போம். நமது இருதயம் தேவனுக்கு முன்பாக சரியாயிருக்கட்டும். இந்த தேசத்திற்கும் அவரின் திருச்சபைபை கட்டுவதில் நோக்கமாக இருக்க அவரின் இருதயத்தை தேடுவோமாக.

## ஜெப குறிப்பு 5

நம்முடைய கண்கள் இயேசுவையே நோக்கட்டும், நம்முடைய சிந்தை அவரிலிருக்கும் போது சமாதானத்தின் பிரபு நம்மை முழு சமாதானத்தினால் நிரப்புவார். தேசத்தின் பிரச்சனையிலிருந்து நம் கண்களை எடுத்துவிட்டு, தேவனின் நோக்கம் தேசத்தின் மீது வர ஜெபிப்போம்.

கிறிஸ்துபோல் இருப்பதிலும் மற்றும் அன்பில், சமாதானம், நம்பிக்கையிலும் நடப்பதில் முன்மாதிரியாயிருக்க நாம் ஜெபிப்போம்.